www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 11

தேர்வு எண்

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

## பொருளியல்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி - I

20X1=20

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்
(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைச் சிக்கல்
   அ) எண்ணற்ற விருப்பங்கள் ஆ) அளவற்ற வளங்கள்
   இ) பற்றாக்குறை ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உற்பத்தி
2. பயன்பாடு என்பது
   அ) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப் புள்ளி
   ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்களின் சக்தி
   இ) பண்டங்களின் மொத்த மதிப்பு ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்
3. காஸன் முதல்விதி ------ என்று அழைக்கப்படுகிறது.
   அ) சமஇறுதி நிலைப் பயன்பாட்டு விதி ஆ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி
   இ) தேவை விதி ஈ) குறைந்து செல் விளைவு விதி
4. கொடுக்கப்பட்ட தேவை வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல் கீழ்காணுமாறு அழைக்கப்படுகிறது.
   அ) தேவை விரிவு மற்றும் சுருக்கம் ஆ) தேவை இடப்பெயர்வு
   இ) தேவை கூடுதல் மற்றும் குறைதல் ஈ) மேற்காண் அனைத்தும்
5. முதன்மை உற்பத்திக் காரணிகளாவன
   அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு ஆ) உழைப்பு மற்றும் மூலதனம்
   இ) நிலம் மற்றும் மூலதனம் ஈ) நிலம் மற்றும் உழைப்பு
6. கீழ்க்காண்பவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?
   அ) குறை அளிப்பு ஆ) இயங்கும் தன்மையுடையது
   இ) பலவகைப்படும் ஈ) இயற்கையின் கொடை
7. பணச் செலவை ----- செலவு என்றும் அழைக்கலாம்.
   அ) வெளிப்படையான ஆ) உள்ளார்ந்த இ) சமூக ஈ) உண்மை
8. நீண்ட கால சராசரிச் செலவு கோடு ------ கோடு என அழைக்கப்படுகிறது.
   அ) தேவைக் ஆ) திட்ட இ) உற்பத்தி ஈ) விற்பனை
9. எந்த அங்காடியில் AR மற்றும் MR சமமாகும்.
   அ) இருவர் முற்றுரிமை ஆ) நிறைவுப் போட்டி
   இ) முற்றுரிமைப் போட்டி ஈ) சில்லோர் முற்றுரிமை
10. விற்பனைச் செலவிற்கு உதாரணம்
    அ) கச்சாப்பண்டம் விலை ஆ) போக்குவரத்துச் செலவு
    இ) விளம்பரச் செலவு ஈ) கொள்முதல் செலவு
11. தொன்மைக் கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் யார்?
    அ) ரிக்கார்டோ ஆ) கீன்ஸ் இ) மார்ஷல் ஈ) வாக்கர்
12. துய்ப்பு தவிர்ப்பு வட்டிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் ------
    அ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஆ) N. W. சீனியர் இ) போம்போவர்க் ஈ) நட்விக்சல்
13. வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம்
    அ) நான்கு ஆ) ஏழு இ) ஐந்து ஈ) பத்து
14. V.K.R.V. இராவ் இவரின் மாணவராக இருந்தவர்
    அ) J. M. கீன்ஸ் ஆ) காலின் கிளார்க் இ) ஆடம் ஸ்மித் ஈ) ஆல்பிரட் மார்ஷல்

5. இந்தியாவின் பசுமைப்புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்.
   அ) M. S. சுவாமிநாதன் ஆ) காந்தி இ) விஸ்வேஸ்வரையா ஈ) N. R. விஸ்வநாதன்

6. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மையான நோக்கம்
   அ) சேவை ஆ) தொழில் இ) வேளாண்மை ஈ) வங்கி

. "பொருளியல் நடவடிக்கையின் ஒரே நோக்கம் நுகர்வே" என்று கூறியவர்
   அ) ஆடம் ஸ்மித் ஆ) ஜே. எம். கீன்ஸ் இ) ரிகார்டோ ஈ) ஆல்ஃபிரட் மார்ஷல்

. $(\alpha+\beta) = 1$ என்பது ----- விகித விளைவு விதியை குறிக்கும்.
   அ) வளர்ந்து செல் ஆ) குறைந்து செல் இ) மாறா ஈ) அ மற்றும் ஆ



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19. ------ நிலை விலைபேதம் காட்டுதல் என்பது "முழுநிறைவு பேதம் காட்டும் முற்றுரிமை" என அழைக்கப்படுகிறது.
அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம்
20. "மொத்த நாட்டு மகிழ்ச்சி" என்ற தொடர் ------ ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
அ) 1970 ஆ) 1972 இ) 1960 ஈ) 1962

## பகுதி – II

குறிப்பு : i) ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
ii) வினா எண்.30க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 7x2=14

21. பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.
22. சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன?
23. உற்பத்தியாளர் சமநிலையை அடைய நிபந்தனை யாது?
24. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?
25. தூயப் போட்டியின் இன்றியமையாத பண்பை குறிப்பிடு.
26. நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?
27. இயற்கை வளங்களைப் பற்றிக் குறிப்பு வரைக.
28. இந்தியாவின் காலனித்துவ சுரண்டலின் நிலைகள் யாவை?
29. வெளிப்படையானச் செலவு – வரையறு.
30. மாற்று வருவாய் என்றால் என்ன?

## பகுதி – III

குறிப்பு : i) ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
ii) வினா எண்.40க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 7x3=21

31. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
32. மனித விருப்பங்களின் இயல்பைக் கூறுக.
33. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?
34. வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
35. நிறுவனத்திற்கும், தொழிற்சாலைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
36. காத்திருத்தல் வட்டிக்கோட்பாட்டை எழுதுக.
37. வேளாண்மை பொருளாதாரம் பற்றி அம்பேத்காரின் பொருளாதார கருத்துக்களைக் கூறுக.
38. 1991 ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கையின் ஏதேனும் மூன்று நோக்கங்களை குறிப்பிடுக.
39. பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக. மேலும் அதனை மதிப்பீடு செய்க.
40. வானவில் புரட்சி பற்றி சிறுகுறிப்பு வரைக.

## பகுதி – IV

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. (அ) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை விவரி.
(அல்லது)
(ஆ) நிறைவுப் போட்டியில் விலையும் உற்பத்தி அளவும் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?
42. (அ) தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை?
(அல்லது)
(ஆ) முற்றுரிமைப் போட்டியில் விலையும் உற்பத்தி அளவும் தீர்மானிக்கப்படுவதை வரைபடத்துடன் விளக்குக.
43. (அ) சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை விளக்குக.
(அல்லது)
(ஆ) ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி.
44. (அ) சம அளவு உற்பத்தி கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி.
(அல்லது)
(ஆ) இறுதிநிலை உற்பத்தித்திறன் பகிர்வுக் கோட்பாட்டை விளக்குக.
45. (அ) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.
(அல்லது)
(ஆ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான கூறுகளை விவரி.
46. (அ) குறுகிய காலச் செலவுக் கோடுகளைத் தகுந்த படத்துடன் விவரி?
(அல்லது)
(ஆ) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக.
47. (அ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.
(அல்லது)
(ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் (SSI) பங்கினை விவரி.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com